**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 1-ஆம் நாள் திங்கட் கிழமை**

**Tr.O.P. No.220/2025**

**(TN CD 01-011431-2025)**

தமிழ்செல்வன் .. மனுதாரர்

/எதிராக/

1. வீரப்பத்திரன்
2. மகாலெட்சுமி
3. லதா
4. பெரியம்மாள்
5. ராஜகுமாரி .. எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 29.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.செல்வம் அவர்களும், 4-வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பசுபதி ராஜா அவர்களும் முன்னிலையாகியும், 4-வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று மேற்குறிப்பு செய்தும், 1,2, 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்தும், 1 ,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.431/2024 என்ற வழக்கை, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றி, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 உடன் இணைத்து நடத்த உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

மனுதாரர் மீது 1-ஆம் எதிர்மனுதாரர், விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல்வழக்கு எண்.339/2024 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இந்த மனுதாரர் எதிர்கட்சி செய்து வழக்கு விசாரணைக்காக உள்ளது. 2-வது எதிர்மனுதாரர், இம்மனுதாரர் மீதும், 1-ஆம் எதிர்மனுதாரர் மீதும், விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு அசல் வழக்கு எண்.431/2024 வழக்கு தாக்கல்செய்துள்ளார். விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 உள்ள வழக்கில் விசாரணைக்காக வாய்தா 20.11.2025 ந்தேதி உள்ளது. விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.431/2024 என்ற வழக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 02.12.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 2 வழக்குகளிலும் இந்த மனுதாரர் 1-ஆம் பிரதிவாதியாக ஆஜராகியுள்ளார். வழக்கில் கண்டுள்ள சொத்துக்களும் ஒரே விவகாரத்தை பொறுத்தும், ஒரே சொத்துக்களை பொறுத்துமாகும். ஒரே சொத்துக்களை பொறுத்தும், ஒரே

விவகாரத்தை பொறுத்தும், இரண்டு நீதிமன்றங்களில் தனித்தனியே விசாரணை நடந்து வேறு, வேறு வகையில் தீர்ப்பு வந்தால் தரப்பினர்களுக்கு மிகுந்த சிரமமும், வழக்கில் தீர்பு காண்பதில் பல சிக்கல்களும் ஏற்பட்டுவிடும். மேற்படி 2 வழக்குகளும், உள்ள நீதிமன்றங்கள், இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட நீதிமன்றங்கள் ஆகும். மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மீது இரண்டு நீதிமன்றத்திலும் தொடர்ந்துள்ள 2 வழக்குகளையும் ஒரே நீதிமன்றம் விசாரித்தால் தான், வழக்கின் உண்மை நிலை தெரியும். ஒரே தீர்ப்பளிக்க முடியும் அவ்வாறு ஒரே நீதிமன்றத்தில் வழக்கை நடத்தாமல் வெவ்வேறு நீதிமன்றங்களில் தனி, தனியாக வழக்கை நடத்தினால் முரண்பட்ட தீர்ப்பும், வீண் கால விரையமும், பொருள் விரையமும், இரு தரப்பினர்களுக்கும் ஏற்பட்டு இரு தரப்பினர்களுக்கும் பல இன்னல்கள் ஏற்பட்டுவிடும். இரண்டு வழக்குகளையும், ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்வதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக உள்ள அசல் வழக்கு எண்.339/2024 உடன் விருத்தாசலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் உள்ள அசல் வழக்கு எண்.431/2024 அசல் வழக்கை இணைத்து நடத்துவதற்கு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு இரு வழக்குகளையும் இணைத்து நடத்த மாற்றம் செய்யாவிட்டால் அதனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும். எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் மனுதாரர் பிரார்த்திக்கிறார்.

3. 4-வது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், எதிருரை தாக்கல் இல்லை என்றும், மனுவினை அனுமதிக்கலாம் என்றும் மேற்குறிப்பு செய்துள்ளார். 1,2,3 மற்றும் 5

எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. 1,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டனர்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ எதுவும் முன்னிடப்படவில்லை.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்** :

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனை** :

6. விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.431/2024 என்ற வழக்கை, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றி, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 உடன் இணைத்து நடத்த உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில், அசல் வழக்குகளை மாற்றுவதற்கு, ஒரே சொத்துக்களை பொறுத்து மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், ஒரே சொத்துக்களை பொறுத்து விவகாரம் எழுந்துள்ளது என்றும், இந்நிலையில், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் நடத்தாமல் வெவ்வேறு நீதிமன்றங்களில் தனி, தனியாக வழக்கை

நடத்தினால் முரண்பட்ட தீர்ப்பும், வீண் கால விரையமும், பொருள் விரையமும், இருதரப்பினர்களுக்கும், ஏற்பட்டு இரு தரப்பினர்களுக்கும் பல இன்னல்களும் ஏற்பட்டுவிடும் என்றும், இரண்டு வழக்குகளையும், ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றும், காரணம் கூறப்பட்டுள்ளது. 4-வது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், இம்மனுவிற்கு எதிராக எதிருரை தாக்கல் இல்லை என்றும், மனுவினை அனுமதிக்கலாம் என்றும் மேற்குறிப்பு செய்துள்ளார். மற்ற எதிர்மனுதாரர்கள், தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர்.

7. **இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் மற்றும் case status in ecourtservice ஆகியவற்றை பரிசீலனை செய்யப்பட்டன**.

8. மனு சங்கதிகள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இம்மனுவில் கண்டுள்ள 1-வது எதிர்மனுதாரர், இம்மனுதாரருக்கு எதிராக வழக்குச் சொத்துக்களை பொறுத்து, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி, அசல் வழக்கு எண்.339/2024 தாக்கல் செய்து, மேற்படி அசல் வழக்கானது, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதும், இம்மனுவில் கண்டுள்ள 2-வது எதிர்மனுதாரர் தன்னை வாதியாகவும், இம்மனுவில் கண்டளள் மனுதாரர் 1-ஆம் பிரதிவாதியாகவும், இம்மனுவில் கண்டுள்ள 1-வது எதிர்மனுதாரர் 2-ஆம் பிரதிவாதியாகவும் கண்டு, வழக்கு சொத்துக்களை பொறுத்து வாதிக்கான பாதி பாகம் கோரி விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.431/2024 தாக்கல் செய்துள்ளார் என்பதும், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளிலும் இன்னும் விசாரணை தொடங்கப்படவில்லை என்பதும், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளிலும் உள்ள

வழக்கு சொத்துக்கள் ஒரே வழக்கு சொத்துக்கள் என்பதும், ஒரே வழக்கு சொத்துக்களைப் பொறுத்து தான் மேற்சொன்ன இரண்டு அசல்வழக்குகளிலும் பிரச்சனை எழுந்துள்ளது என்பதும், மேலும், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளின் வழக்கு சங்கதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாகவே உள்ளன என்பதும், இரண்டு அசல் வழக்குகளிலும் உள்ள தரப்பினர்கள் ஏறக்குறைய ஒரே தரப்பினர்கள் என்பதும், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஏறக்குறைய ஓரே ஆவணங்கள் என்பதும் தெரிய வருகிறது. மேற்கண்ட சூழ்நிலைகளில், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளையும் வெவ்வேறு நீதிமன்றங்களில் தனித் தனியாக விசாரணை நடத்தப்பட்டால், முரண்பாடான தீர்வு காண நேரிட்டுவிடும், அதனால், பல சட்ட நடவடிக்கைளுக்கு வழிவகுத்துவிடும். மேலும், இம்மனுவில், 4-வது எதிர்மனுதாரர், இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்துள்ளார். மற்ற எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக, தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர். எனவே, தேவையற்ற சட்ட நடவடிக்கைகள் எழுவதை தவிர்க்கவும், முரண்பாடாற்ற, முழுமையான தீர்வு காணவும், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளையும், ஒரே நீதிமன்றத்தில் வழக்குகளின் தன்மை மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப இணைத்து விசாரணை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், அவ்வகையில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்றும் இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. முடிவாக, விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண்.431/2024-ஐ, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்ற

வேண்டும் என்றும், விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள், மேற்படி அசல் வழக்கு எண்.431/2024 -ஐ பெற்று, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 என்ற வழக்குடன், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கேற்ப இணைத்து விசாரணை நடத்தி, உரிய சட்த்தின்படி வழக்குகளை முடிக்கவும், இவ்வாறாக இம்மனுவை அனுமதித்தும் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 1-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.06.01 19:02:54 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.06.01 19:03:00 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.